<u>ஜோலார்பேட்டை நகராட்சி</u>
<u>அவசரக் கூட்டம்</u>

**2021**ம் ஆண்டு செப்டம்பர் மாதம் **13.09.2021**ம் நாள் திங்கட்கிழமை மாலை **3.00** மணிக்கு ஜோலார்பேட்டை நகராட்சி அலுவலகத்தில் தனிஅலுவலர் அவர்களால் நடத்தப்பட உள்ள அவசரக் கூட்ட நடவடிக்கைகள்

தனி அலுவலர்

**<u>பொருள் எண்.1</u>**

ஜோலார்பேட்டை நகராட்சியில் 2021–22ம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பில் மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்கள் துறை மான்ய கோரிக்கையின் போது அனைத்து நகர்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் ஒரு நவீன எரிவாயு தகன மேடை அமைக்கப்பட வேண்டும் என இவ்வரசின் கொள்கையாகும் என அறிவித்துள்ளார். அதன்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை 28 அவர்களின் ந.க.எண்.14006/2021/தி2–2, நாள்.08.09.2021 கடிதத்தில் இந்நகராட்சிக்கு நவீன எல் பி ஜி எரிவாயுடன் கூடிய தகன மேடை அமைக்க ரூ.150.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, அதன்படி ஜோலார்பேட்டை நகராட்சியில் புதியதாக நவீன எல் பி ஜி எரிவாயு உடன் கூடிய தகன மேடை அமைக்க வார்டு எண் 17 பொட்டிகான் பள்ளம் உரகிடங்கில் சர்வே எண்.69ல் மேடை ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**
நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி நிர்வாக அனுமதி பெற்று மேற்படி பணியினை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.இ1/833/2021)

ஜோலார்பேட்டை நகராட்சி

அவசரக் கூட்டம்

2021ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13.09.2021ம் நாள் திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு ஜோலார்பேட்டை நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட அவசர தீர்மானங்கள்

| வ.எண் | பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | 1 | 281 | அலுவலக குறிப்பு அங்கீகரித்தும் அனுமதித்தும் தீர்மானிக்கப்பட்டது. |